# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.32/2023

## அ.சா.8(LW19)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | டாக்டர்.சுபாஷினி | **தொழில்** | **மருத்துவர்** |
| **தகப்பனார் பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **23.02.2026** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2 ஆஜர்.

மொழிபெயர்ப்பாளர் திரு. அரவிந்தன் முன்னிலையில் பின்வருமாறு சாட்சிகளின் விசாரணை நடத்தப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக காது, மூக்கு தொண்டை அறுவை சிகிச்சை பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.08.2022 அன்று நான் பிரேத பரிசோதனை மருத்துவராக பணியில் இருந்த போது, வடமதுரை காவல் நிலைய குற்ற எண். 294/2022 சட்டப்பிரிவு 302 இதச வழக்கில் கொலையுண்டு இறந்து போனவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்ய தலைமை காவலர் 248 திரு. ராமகிருஷ்ணன் என்பவர் ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். **அந்த வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.4 ஆக குறியிடப்படுகிறது**. மேற்படி வேண்டுகோள் கடிதத்தை பெற்று பிரேத பரிசோதனையை 03.55 முதல் 04.55 வரை பிரேத பரிசோதனை செய்தேன்.

பிரேதத்தில் தசைவிரைப்பு தன்மை காணப்படவில்லை. பிரேதமானது உப்பிய நிலையில் உள்ள ஆண் பிரேதமானது, பச்சை நிறமாக மாறிய நிலையில் காணப்பட்டது. பிரேதத்தில் வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு அளவிலான புழுக்கள் காணப்பட்டது. விரல் நகங்கள் நீல நிறத்தில் காணப்பட்டது.

**வெளிப்புற காயங்கள்**

1. முன்தலை மற்றும் முகத்தில் வெவ்வேறு அளவிலான சிதைவு காயங்கள் காணப்பட்டன.

2. இரண்டு கைகள் மற்றும் கால்களில் வெவ்வேறு அளவிலான சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டன.

**பிரேத பரிசோதனையின் போது காணப்பட்ட உள்புறக்காயங்கள்**

1. தலையின் கபால எலும்பில் அகலமான காயம் காணப்பட்டது.

2. மூளையின் வெளிப்புற சவ்வானது கிழிந்த நிலையில் காணப்பட்டது.

3. மூளையானது சிறு சிறு துண்டுகளாக சிதைந்து காணப்பட்டது, மூளையை சுற்றி புழுக்களானது காணப்பட்டது.

4. தலையின் பின்பகுதியில் அகலமான காயம் காணப்பட்டது.

5. கழுத்தின் முன்பகுதியில் குரல்வளை எலும்பு உடையாமலும் மற்றும் தைராய்டு பகுதி நல்ல நிலையில் இருந்துது.

6. மார்பக விலா எலும்பானது உடையாமல் நல்ல நிலையில் இருந்து,

7. இருதயமானது வெளிரி காணப்பட்டது, உள்ளறைகள் காலியாக இருந்தது. மேலும், இருதய வால்வுகள் பாதிப்பின்றி இருந்தது. இருதய இரத்தக்குழாயில் சிறிதளவு ரத்தம் உறைந்து காணப்பட்டது.

8. இரண்டு புற நுரையீரலானது சுருங்கிய நிலையிலும், உள்ளறைகள் வெளிரியும் காணப்பட்டது.

9. வயிற்றுப்பகுதியான காலியாக காணப்பட்டது. மேலும், வயிற்றுப்பகுதியின் உள்ளறைகள் சிதைந்து காணப்பட்டது.

10. வயிற்றின் குடற்பகுதிகள் முழுவதும் காற்று நிரம்பியும் சிதைந்தும் காணப்பட்டது.

11. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் சுருகிங்கிய நிலையில் மற்றும் சிதைந்தும் காணப்பட்டது.

12. சிறுநீரக பையில் 10 மிலி சிறுநீரானது இருந்தது.

13. இடுப்பு மற்றும் பின்புற எலும்புகள் நல்ல நிலையில் காணப்பட்டது.

பிரேத பரிசோதனையின் போது எடுக்கப்பட்ட இறந்தவரின் உடலின் உள்ளுறுப்புகள் ரசாயன பகுப்பாய்விற்காக மதுரை வட்டார அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. பின்பு மதுரை வட்டார அறிவியல் ஆய்வகத்தில் ஆய்வறிக்கை பெறப்பட்டு, அந்த அறிக்கையில் இறந்தவரின் உள்ளுறுப்புகளில் மது மற்றும் விசம் இருந்ததற்கான தடயம் இல்லை என்று அறிக்கை வந்ததன் அடிப்படையில், எனது இறுதி கருத்துரை வழங்கினேன். எனது கருத்துரையில் இறந்துவருக்கு ஏற்பட்ட தலை மற்றும் முகத்தில் ஏற்பட்ட அதிகப்படியான நசுங்கிய காயத்தினால் இறப்பு ஏற்பட்டடிருக்கலாம் என்று எனது இறுதிக்கருத்துரையை வழங்கினேன். நான் மேலே சொன்ன காயங்கள் நீதிமன்றத்தில் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட சா.பொ.3. கல்லை வைத்து தாக்கும் போது ஏற்பட வாய்ப்புண்டு. **நான் வழங்கிய பிரேத பரிசோதனை மற்றும் இறுதிக்கருத்துரை அ.த.சா.ஆ.5 ஆக குறியிடப்படகிறது.** ஆய்வாளர் என்னை விசாரித்தார் .

<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கில் இறந்து போன நபரின் பிரேதமானது எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பிரேதம் மருத்துவமனைக்கு யாரால் கொண்டு வரப்பட்டது என்ற

விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரேதம் மருத்துவமனைக்கு யாரால், எத்தனை மணிக்கு கொண்டு வரப்பட்டது சம்மந்தமான ஆவணங்களை நான் பார்வையிடவில்லை என்றால் சரிதான். பிரேதத்தின் மீது என்ன ஆடைகள் இருந்தது என்ற விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. நான் பிரேத பரிசோதனை துவங்குவதற்கு முன்பாக பிரேதத்தை என் முன்பாக புகைப்படம் எடுத்தார்களா என்றால் இல்லை. பிரேதத்தில் முகமானது சிதைந்து காணப்பட்டது. அந்த பிரேதத்தின் முகத்தின் அடையாளங்கள் தெளிவாக தெரியாத நிலையில் முதல் விசாரணையில் நான் மேற்சொன்ன காயங்கள் முகம் முழுவதும் காணப்பட்டது என்றால் சரிதான். உடலில் முகம், மற்றும் தலை தவிர உடல் பகுதியில் எவ்வித காயங்களும் இல்லை என்றால் சரியல்ல. சிராய்ப்பு காயங்கள் கை மற்றும் கால்களில் இருந்தது. நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கையில் மேலே சொன்ன சிராய்ப்பு காயங்களின் அளவுகள் மற்றும் அதன் எண்ணிக்கை குறித்து குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். பிரேதத்தின் தலையிலும், முகத்திலும் கண்ட காயங்கள் இன்னாரென்று குறிப்பிட்டு சொல்லும் அளவிற்கு அடையாளம் காணப்படவில்லை என்றால் சரிதான். பிரேதமானது நான் பிரேத பரிசோதனை தொடங்குவதற்கு முன்பு எந்த நிலையில் காணப்பட்டது என்றால் குளிர்ந்த நிலையிலும், தசைகள் தளர்ந்த நிலையிலும் காணப்பட்டது. பிரேதத்திற்கான இறப்பு ஏற்பட்ட பின்பு பிரேதத்தின் விறைப்பு தன்மை 2 மணி நேரத்திலிருந்து 4 மணி நேரத்திற்குள் முகத்தில் மற்றும் தாடையிலிருந்து ஆரம்பித்து கீழ் நோக்காக 12 மணி நேரத்தில் மொத்த உடம்பிற்கும் செல்லும். பிரேதம் எவ்வளவு நேரத்திற்குள் தளர்ச்சியுறும் என்றால் 24 மணியிலிருந்து 36 மணி நேரத்திற்குள் முழுவதுமாக தளர்ச்சி அடையும். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட பிரேதத்தின் உடல் சிதைவானது எத்தனை மணியிலிருந்து ஏற்பட்டது என்றால் உடம்பிலுள்ள லாவா புழுக்களின் அளவுகள் வெவ்வேறு அளவில் காணப்பட்டதால் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை. பிரேத பரிசோதனை ஆரம்பிக்கும் போதே உடலிலிருந்து துர்நாற்றம் வீச ஆரம்பித்து விட்டது. பிரேத பரிசோதனையில் பிரேதத்திலிருந்து கை மற்றும் கால் நகங்களில் ஏதேனும் மனித தசை காணப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி சிதைந்து நசுக்கப்பட்ட காயமானது சாலை விபத்தினால் ஏற்படுமா என்றால் கனரக மோட்டார் வாகனங்கள் மோதும் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் சரியாக சொல்ல முடியாது. விபத்தினால் ஏற்பட்ட காயம் தலையின் இரண்டு பக்கங்களிலும் வர வாய்ப்பில்லை. முழுவதுமாக நசுங்கியிருக்கும். வாகனத்தின் முன்புற டயர் ஏறி நசுக்கப்படும் பட்சத்தில் இரண்டு பக்கங்களிலும் காயம்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புகள் மிகவும் குறைவு. அ.த.சா.ஆ.5 பிரேத பரிசோதனை அறிக்கையானது உடல் உள்ளுறுப்புக்கள், உடற்கூராய்வு ஆய்வகத்திற்கு அனுப்பபட்ட பின்புதான் என்னால் சொல்லப்பட்டது என்றால் சரிதான். உடல் உள்ளுறுப்புக்கள் குறித்து வரப்பெற்ற அறிக்கை பெறப்பட்ட பின்புதான் நான் இறுதி அறிக்கை வழங்கினேன். அ.த.சா.ஆ.5 அறிக்கையான 26.08.2022 என்னால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். உடல் உள்ளுறுப்பு அறிக்கை எனக்கு கிடைக்கப்பெற்ற தேதி 03.12.2022 அன்று என்றால் சரிதான். உடல் உள்ளுறுப்பு அறிக்கை எனக்கு கிடைக்கப் பெறுவதற்கு முன்பே நான் இறுதி கருத்துரை வழங்கினேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.5 அறிக்கையை நான் நீதித்துறை நடுவருக்கு நேரடியாக அனுப்பினேனா அல்லது காவல்துறையிடம் ஒப்படைத்தேனா என்பது ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் விசாரித்தாரா என்பது நிறைய வழக்குகள் இருப்பதால்

குறிப்பாக ஞாபகம் இல்லை. பிரேத பரிசோதனைக்காக காவல்ஆய்வாளர் என்னிடம் கொடுத்த வேண்டுகோளில் வழக்கின் வரலாறு குறித்த ஆவணத்தின் 2 வது பக்கத்தில் காட்டுப்பகுதியில் உள்ள முட்புதர் அருகே இறந்து கிடந்தது தன் தம்பி ராம்குமார் என அடையாளம் தெரிந்து கொண்டதாகவும், தனது தம்பி ராம்குமாரின் இடது பக்க தலையிலும், இடது பக்க காதிலும் பலத்த காயம் ஏற்பட்டும் , இடது கால் பாதத்திற்கு மேல் சிராய்ப்பு காயம் ஏற்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் சடலத்தின் அருகே கல் இருந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிரேத பரிசோதனையின் போது சடலத்தில் மது வாசனை இருந்ததாக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். உடல் சிதைந்தும், அழுகிய நிலையில் புழுக்களினால் ஏற்பட்ட துர்நாற்றம் மேலோங்கி இருந்தது. பொதுவாக பிரேதத்தில் உள்ளுறுப்புக்களில் மதுவானது எவ்வளவு நேரம் இருக்கும் என்றால் மதுவின் அளவு மற்றும் தன்மையைப் பொறுத்து மாறுபடும்.

<u>அரசு தரப்பில் மறுவிசாரணை -</u>

நான் வழங்கிய 26.08.2022 ம் தேதிய இறுதி கருத்துரையானது இரசாயன பகுப்பாய்வு அறிக்கை வரப்பெற்ற பின்புதான் 03.12.2022 அன்று என்னால் நீதித்துறை நடுவருக்கு வழங்கப்பட்டது. அது **அ.த.சா.ஆ.6. ஆகும்.** இரசாயன பகுப்பாய்வு மற்றும் குருதி வடிநீரியியல் அறிக்கைகளை பரிசீலனை செய்துதான் மேற்படி அ.த.சா.ஆ.6.அறிக்கை வழங்கினேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.த.சா.ஆ.6.அறிக்கையில் என்னென்ன உள்ளுறுப்புக்கள் மேற்கண்ட இரசாயன பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அ.த.சா.ஆ.6 அறிக்கையில் இரசாயன பகுப்பாய்வில் என்ன கண்டறியப்பட்டது போன்ற விவரப் பட்டியல் இணைக்கப்படவில்லை என்றால் அந்த சமயத்தில் இரசாயன மற்றும் குருதி வடிநீரியியல் அறிக்கை என் வசம் இருந்ததா என்று தற்போது ஞாபகம் இல்லை. அ.த.சா.ஆ.6 அறிக்கையில் மேற்சொன்ன இரண்டு அறிக்கைகளும் இணைக்கப்படவில்லை என்றால் இணைப்பது நடைமுறையில் இல்லை.

<u>மறுவிசாரணை - இல்லை.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.23 19:04:48 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.